**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08022023-6731

Volume: 8

Issue: 2

Month: October

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 15.07.2023

Accepted: 20.08.2023

Published: 01.10.2023

Citation:
Jeyakrishnan, P. "Oral Traditions on Kannagi Worship in Kerala." *Shanlax International Journal of Tamil Research,* vol. 8, no. 2, 2023, pp. 14–25.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i2.6731

*Corresponding Author:
jeyakrishnan@keralauniversity.ac.in

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Oral Traditions on Kannagi Worship in Kerala

**Dr. P. Jeyakrishnan**
*Professor and Head, Department of Tamil*
*University of Kerala, Kerala*

**Abstract**
In Silappathikaram, the Vanjikandam tells the events of the hill country. There are also many upcountry stories in Silambam which tells us about the spread of Kannagi worship in the hill country. The kannagi worship described in the Silappathikaram Vanjikandam is still followed and presented as oral customs among the Tamil and Malayalam folk.

**Key Words:** Kannagi Worship, Vanjikandam, Silappathikaram, Oral Vaazhvaru, Seethalai Sathanar, Ilangovadigal.

**References**

1. Silappathikaram
2. Tholkappiyam
3. Thiruchamparathanthathi, Chellan Govindan Edition, Chittoor.
4. Nachimuthu, K., Silappathikaram Cheranattu Kappiyam, Unprinted article.
5. Pugazhendiyar), Kovalan Kathai, Madurai.
6. Prof. Naseemuddin, Silappathikaram and Other Kannagi Stories and Worships.
7. Parameswara Iyer, S., Manimanga Thotram Pattu, Kerala Sahihya Charitram, Trivandrum, Vol.1, 1957.
8. Kumaresan K Silambil Kathai Verupadugal, Unpublished Doctoral Dissertation, Kerala University, 1975.

# கேரளத்தில் கண்ணகி வழிபாடு குறித்த வாய்மொழி வழக்காறுகள்

*முனைவர் ப. ஜெயகிருஷ்ணன்*
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், தமிழ்த்துறை
கேரளப் பல்கலைக்கழகம், கேரளா

## *முன்னுரை*

*சிலப்பதிகாரத்தில் வஞ்சிக்காண்டம் மலை நாட்டு நிகழ்வுகளைக் கூறுவதாக அமைகிறது. மலைநாட்டில் கண்ணகி வழிபாடு பரவியிருந்ததைச் சொல்லும் சிலம்பில் பல மலைநாட்டுச் செய்திகளும் காணப்படுகின்றன. சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டத்தில் விளக்கப்படும் கண்ணகி வழிபாடு தமிழ் மலையாள நாட்டுப்புற மக்களிடையே இன்றும் பின்பற்றப்பட்டு வாய்மொழி வழக்காறுகளாக வழங்கி வருகின்றன. கண்ணகிவழிபாட்டையும்தமிழ்மலையாள மக்களிடையே இன்றும் காண்கிறோம். கண்ணகி வழிபாட்டைப் பரப்புவதற்கே இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார். கண்ணகி வழிபாடு கேரளத்தில்தான் முதலில் தொடங்குகிறது. பத்தினிக்கு முதலில் கல்லெடுத்து வழிபாடு செய்யத் தூண்டியவர் இளங்கோவின் தமையன் சேரன் செங்குட்டுவன். இதற்காக முதலில் கல்லெடுத்து கொடுத்தவர் செங்குட்டுவனின் மாப்பெருந்தேவி வேண்மாள் என்று குறிப்பிடுகிறது சிலப்பதிகாரம். கண்ணகி கதையைச் சீத்தலைச் சாத்தனார் சொல்லக்கேட்டு செங்குட்டுவனின் கோப்பெருந்தேவி அக்கதையைக் கேட்டவுடன்கூறியகூற்றைக் கவனத்தில்கொள்ள வேண்டும்*

***உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினும்***
***செயிருடன் வந்த இச்சேயிழை தன்னினும்***
***நன்னுதல் வியக்கு நலத்தோர் யாரென***
***மன்னவ னுரைப்ப மாபேருந்தேவி***
***காதலன் துன்பங் காணாது கழிந்த***
***மாதரோ பெருந்திரு வுறுக வானகத்***
***தத்திற நிற்க நம் அகல் நாட்டைடந்தவிப்***
***பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்***
***(25; 109-114 )***

*எனவே சிலப்பதிகாரத் தலைவி கண்ணகி வழிபாடு நடக்கத் தூண்டியவள் சேரன் மனைவி வேண்மாள். அதன் பின்னர் அவளுக்குக் காவியக் கோவில் எடுத்தவர் சேர இளவல் இளங்கோவடிகள்.*

*கண்ணகி வழிபாடு பின்னர் தான் பாண்டிய நாடு,சோழநாடு, ஈழம் முதலிய நாடுகளில் பரவியது. இன்றைய நிலையில் கண்ணகி வழிபாடு இலங்கையில் தமிழரிடையே கண்ணகை அம்மன் வழிபாடாகவும் சிங்களவரிடையே பத்தினி தெய்யோ வழிபாடாகவும் மிகவும் சிறப்பாக வழங்கி வருகிறது. ஊரெல்லாம் கண்ணகிக்குக் கண்ணகை அம்மன் என்றும் பத்தினி தெய்யோ என்றும் கோயில்கள் இலங்கையில் நூற்றுக்கணக்கில் காணப்படுகின்றன என்று பேராசிரியர் நாச்சிமுத்து குறிப்பிடுகிறார்.*

## கேரளத்தில் கண்ணகி வழிபாடு

*கேரளத்தில் கொடுங்களூர் பகவதி, பாலக் காட்டுப்பகுதியில் கண்ணகி கோவில்கள், திருவனந்தபுரம் பகுதியில் ஆற்றுகால் பகவதியம்மன் கோவில், பெருமலையில் பழங்குடிமக்கள் வழிபடும் காளி, மங்கலா தேவிக் கோட்டத்தில் மங்கலாதேவிக்கோவில் என்றெல்லாம் கண்ணகி வழிபாடு இன்றும் வழக்கில் இருக்கிறது. கேரளத்தில் கண்ணகி கதை தோற்றம் பாட்டாக வழங்குவதாக*

பி. எல். சாமி கண்ணகி வழிபாடும் தோற்றம் பாட்டும் என்ற ஆராய்ச்சி கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

கேரள மலைகளில் வாழும் முதுவான், மன்னான்,மலையரையர்போன்றபழங்குடி இன மக்களிடையே கண்ணகி சரித்திரம் கதைப்பாடல்களாக வழங்குகின்றது. கேரள மலையில் வாழும் மன்னான் பழங்குடி இன மக்களிடையே கோவலன் சரித்திரம் கதைப் பாடல் வழங்குகின்றதை டாக்டர் நசீம்தீன் பதிவு செய்து வெளியிட்டுள்ளார்.

அது போலவே பால்சேகரும் பெருமலை என்ற இடத்தில் முதுவான் பழங்குடி மக்களிடம் கண்ணகி வழிபாடு மலையாள அம்மன் வழிபாடாக இருப்பதை ஆராய்ந்து கூறியுள்ளார்.

வடமலபாரில் காளிபற்றிய கதைப் பாடல்களில் கண்ணகி கதைக்கூறு உள்ளது. பாலக்காட்டுப் பகுதியில் உள்ள கண்ணகி கோயில்களையும் வழிபாட்டையும் பற்றிய செய்திகளை பேரா. கோவிந்தன் ஆய்வுசெய்து நுண்ணிய செய்திகளை வெளியிட்டுள்ளார். இப்பகுதியில் நிகழ்த்தப்படும் கன்னியார்களி என்ற ஆட்டத்தில் கண்ணிகதை அதாவது சிலம்புகதை அமைந்துள்ளதை ஆராய்ந்து கூறியுள்ளார். பாலக்காடு மாவட்டம் அட்டப்பாடி இருளரிடையே கண்ணகி கதைப்பாடல் வழங்குகிறது.

கேரள கோயில்கள் பலவற்றில் பெண் கடவுளாக கண்ணகியை வழிபடுகிறார்கள். கொடுங்கல்லூர்,செங்கனூர், திருவனந்தபுரம் ஆற்றுகால் போன்ற கோயில்கள் குறிப்பிடத் தக்கவையாகும். கேரளத்தில் நிகழ்த்தப்படும் பல கூத்துக்கலைகளும் கண்ணகி கதையோடு தொடர்புடையவையாகும். பாலக்காட்டில் நிகழ்த்தப்படும் கன்னியார்களி என்னும் கூத்து கண்ணகிகதையோடு தொடர்புடைய கூத்துக் கலையாகும். பாலக்காடு அட்டப்பாடி என்னும் பகுதியில் வாழும் இருளர் பழங்குடிகள் ஒரு வாரம் கோவலன் கூத்து என்னும் தலைப்பில் கண்ணகி கதையை நிகழ்த்துகின்றனர்.

ஒற்றைமுலைச்சி என்று அழைக்கப்படும் கடவுள் வடிவம் கண்ணகி கதையோடு தொடர்புடைய ஒன்றாகும். இரவு நேரங்களில் தோன்றி இளைஞர்களைத் தாக்கும் ஒரு சிறு தெய்வமே ஒற்றை முலைச்சி என்று மலபார் பகுதியில் இன்றும் நம்பப் படுகிறது. ஒற்றை முலைச்சி என்ற சொல் சிறுவர்களைப் பயமுறுத்தவும் கீழ்படிய வைக்கவும் பயன்படுத்தும் ஒரு சொல்லாக இன்றும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. காளியைப் புகழ்த்தி பாடும் பல பாடல்களில் (தோற்றம் பாட்டு) ஒருபாடல்வடிவம்கண்ணகியோடு தொடர்புடையதாகும்.

பத்தினி கடவுளின் ஒரு வடிவமே காளி வழிபாடு. தென்னிந்திய பகுதியில் கண்ணகி வழிபாடு காளி வழிபாடாக மாறியுள்ளது இந்துச்சூடன் தமது சீக்ரெட்சேம்பர் என்ற நூலில் கொடுங்கல்லூர் பகவதி கண்ணகியே என்பதை பல சான்றுகளுடன் விளக்கியுள்ளார். சிலப்பதிகாரக் கதையில் அமைந்துள்ள கோவில் மேல் கூரை வருணனை அமைப்பு போன்றே திருவனந்தபுரம் ஆற்றுகால் கோவில் அமைப்பு அமைந்துள்ளது.எனவே கொடுங்கல்லூர் பகவதியும் திருவனந்தபுரம் ஆற்றுகால் அம்மனும் கண்ணகியே என்று குறிப்பிடுகிறார்.

குமுளிக்கு அருகிலுள்ள மங்களா தேவி கோவிலில் வழிபடும் கடவுள் கண்ணகியாகும் என்று அறிஞர்கள் ஆராய்ந்து கூறியுள்ளனர் சிலப்பதிகார அரும்பத உரையாசிரியரும் இதனைச் சுட்டியுள்ளார். சித்ரா பவுர்ணமி நாளன்று இக்கோவிலுள்ள சிறுதெய்வத்தைத் தமிழகத்தில் பல்வேறு பகுதியிலிருந்து மக்கள் வழிபட்டுச் செல்கின்றனர். இக்கோவில்

கட்டப்பட்ட ஆண்டை அறிய முடியவில்லை. தொல்பொருள் ஆய்வாளர்கள் இக்கோவிலின் காலம் கி. பி. 10 -ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று கூறியுள்ளனர்.

சின்னம்மையின் கடவுளான பூமாலா என்ற சிறுதெய்வமும் ஸ்ரீ குறும்பா என்ற சிறுதெய்வமும் கண்ணகியின் மறு வடிவமாகும் என்று ஆய்வாளர்கள்கூறியுள்ளனர். பூமாலா என்னும் சிறுதெய்வத்தை வட மலபார் பகுதியில் சின்னம்மையின் கடவுளாக வழிபட்டு வருகின்றனர். மலபார் பகுதியில் தியர்களால் வழிபடப்பட்டு வரும் சிறுதெய்வமான ஸ்ரீகுறும்பா என்ற பெண்தெய்வமும் கண்ணகி கதையிலிருந்து உருப்பெற்றதாகும். ஸ்ரீ குறும்பா என்னும் பெண் தெய்வம் காவு என்று அழைக்கப்படும் சோலையின் ஒரு மூலையில் வழிபடப்படும் பெண் தெய்வமாகும். இக்கோவில் சீர்மக்காவு என்று வட்டார வழக்கில் அறியப்படுகிறது. சீர்மா என்ற சொல் ஸ்ரீ குறும்பா என்ற சொல்லின் திரிந்த வடிவமாகும்.

## பெருமலையில் கண்ணகி வழிபாடு

சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம் பெருமலையில் கண்ணகி வழிபடப்பட்டுவருவதாக குறிப்பிடுகிறது. கேரளத்தில் இடுக்கி மாவட்டம் காந்தளூர் பஞ்சாயத்தில் அஞ்சு நாடு என்ற பகுதியில் பெருமலையூர் என்ற பகுதி உள்ளது. இங்கு ஒரு கண்ணகி கோவில் உள்ளது. இங்கு முதுவான் பழங்குடி இனத்தவர் வசிக்கின்றனர். இம்மக்களின் முன்னோர் காடுகளிலும் பாறைக்குகைகளிலும் வாழ்ந்துள்ளனர். கண்ணகி கதையும் வாய் மொழியாக இம்மக்களிடையே இன்றும் வழங்கி வருகிறது. அஞ்சு நாட்டை ஆண்டு வந்த கண்ணன் தேவன் என்ற முதுவான் பழங்குடி இன அரசன் கண்ணகி கோவிலை கட்டினதாக வாய்மொழிக் கதைகள் கூறுகின்றன. மண் சுவர்களும் புல் மேய்ந்த கூரையும் கொண்ட கண்ணகி கோவில் மலையாள பகவதி அம்மன் வழிபாடாக இருப்பதை பால்சேகர் சுட்டியுள்ளார். பெருமலை என்று சிலம்பு குறிப்பிடும் பேரியாற்றங்கரையை ஒட்டிய கேரள மலைப்பகுதியில் இன்றும் கண்ணகி வழிபாடு இருக்கிறது என்பது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. வஞ்சிக்காண்டம் குறிப்பிடும் பெருமலை இப்பகுதியாக இருக்கலாம் என்றும் பாலசேகர் குறிப்பிடுகிறார்.

## காளி வழிபாடும் கண்ணகி வழிபாடும்

பத்தினி வழிபாடு காளிவழிபாடு எனும் இரண்டு வழிபாட்டு மரபுகளுக்கும் இடையிலான படிநிலை மாற்றங்களே கண்ணகி கதைகளில் வெளிப்படுகின்றன. பத்தினி வழிபாடு (தொல் தெய்வ வழிபாடு) காளி வழிபாட்டுக்கு மாறி வருகின்ற காலகட்டத்தில் சிலப்பதிகாரம் தோன்றி இருக்க வேண்டும். ஒரு தொல்படிவ தொன்மமானது (Archie type myth) பழங்கதையாக (Legend) உருவான முறையினையே இக்கதைகள் உணர்த்துகின்றன. இவை தொன்ம மயமாக்கம் (Mythicisation) தொன்மை மாற்று மரபு (De Mythicisation) என்னும் இரு நிலைகளில் வைத்து அறியத்தக்கன என்கிறார் பேராசிரியர் நசீம்தீன்

தாய்தெய்வ வழிபாடு மிகத்தொன்மையானது. இனப்பெருக்கத்திலும் விவசாயத்திலும் பெண் முக்கிய பங்கு வகிக்கின்றாள். இந்நிலையிலேயே தாய்தெய்வ வழிபாட்டின் முக்கியத்திவம் முதன்மை பெறுகிறது. கேரளத்து கொடுங்கல்லூர் கண்ணகி கோவில் என வழங்கப்படும் ஆலயத்தில் இம்முறையிலான வழிபாடு நடைபெறுவதை இந்துசூடன் குறிப்பிடுகிறார். இந்தியத் தொன்மங்களில் பெண்ணையும் நிலத்தையும் வளமை நிலையில் தொடர்புப் படுத்திக் கூறுகின்றனர். உமா எனும் பார்வதி பழங்குடி சமுதாயத்தாரின் தெய்வமாக இருந்து பிராமண தெய்வமாகப் பிற்காலத்தில் வளர்ச்சியடைந்தது. சிறு தெய்வங்களான சண்டி, சாமுண்டி, காளி ஆகியன தேவி மாடத்தில் இடம் பெறுகின்றன. (Narendra Nath Bhattacharya 1977 p 59 ) தாந்ரீக வழிபாட்டுச் சடங்குகளில் “ம” என்ற எழுத்து எழுதப்படுகிறது.

கேரளத்துக் கொடுங்கல்லூரில் கண்ணகி கோவில் என வழங்கப்படும் ஆலயத்தில் (குறும்பபகவதி) இம்முறையிலானவழிபாடு நடைபெறுவதாக இந்துசூடன் குறிப்பிடுகிறார் மகரம் என்பது பஞ்ச மகரத்தைக் குறிக்கிறது. அவை மத்யம், (கள்), மாம்சம், மல்ஸயம் (மீன்) முத்தி மைதுனம் (Sex) ஆகியவையாம். தாந்ரீக நூலான சண்டி மந்திரத்தின்படி பஞ்ச மகரம் அல்லாத வேறு ஒரு மந்திரம் இல்லை. கொடுங்கல்லூர் கோவிலில் மீன பரணி நாளில் நடைபெறும் சடங்கில் தெறிப்பாட்டு (ஆபாசப்பாட்டு) பாடப்படுவது மைதுனம் என்பதோடு தொடர்புடையதாகும். இவை எல்லாம் வைதீக மரபிற்கு மாற்று மரபான நாட்டுப்புறச் சமய மரபினைச் சார்ந்தவை என்பதின் தெளிவாகும். எனவே கண்ணகி கோவிலில் காளி வழிபாடு என்பது பிற்கால வளர்ச்சியே என்பது ஆய்வாளர்களின் முடிவாகும்.

தாய் தெய்வ வழிபாடு பிற்காலத்தில் பத்தினி வழிபாடாகவும் காளி வழிபாடாகவும் பிரிந்து பின்னொரு காலத்தில் இரண்டும் இணைந்து விட்டன. பத்தினி வழிபாடு பிராமணச் சார்புடைய இந்து சக்தி வழி பாட்டால் உள்வாங்கப்பட்டுவிட்டது

தமிழகத்தில் கண்ணகி வழிபாடு செல்லத்தம்மன், மாரியம்மன் வட்டபுரியம்மன், திரௌபதியம்மன் வழிபாடுகளோடு ஒன்றிணைந்து விட்டது மேற்கண்ட சூழல்களை முன்வைத்து கண்ணகிகதையைபிரித்தாராய்கின்ற போது நான்கு படி நிலைகள் அமைந்திருப்பதை அறியலாம்.

***கண்ணகி அல்லது பத்தினி தொன்மம் தோன்றிய காலம்***
***கண்ணகி வழிபாடு காளிவழிபாட்டில் உள்வாங்கப்பட்டகாலம்***
***பாண்டிய சேர மன்னர்கள் வரலாறு காளி வழிபாட்டுடன் தொடர்பு படுத்தப்பட்டகாலம்***

சேர பாண்டிய மன்னர்களின் வரலாறும் காளி வழிபாடும் பத்தினி வழிபாட்டுடன் இணைக்கப் பட்டகாலம். இவற்றில் முதலிரண்டும் தொன்மமயமாதலின் முறையைச் சார்ந்தவை. பின்னிரண்டும் தொன்ம மாற்று மரபுச்சார்நிலை. இம்முறையில் தொன்மபழ மரபுக்கதை தொன்மமாகவும் மாற்றமடையும் இம்முயற்சிக்கு சிலப்பதிகாரம் துணை நின்றிருக்கலாம் என கருதலாம். மதுரைக் காண்டத்தில் இறுதியில் வரும் பகுதி இங்கு நோக்கத்தக்கதாகும்.

***"மதுரைமா தெய்வ மாபத் தினிக்கு***
***விதிமுறை சொல்லி யழல்வீடு கொண்ட பின்***
***கருத்துரு கணவர் கண்ட பின் நல்லது***
***இருத்தலு மில்லே நிற்றலுமில னெனக்***
***கொற்றவை வாயிற் பொற்றொடி தகர்த்துக்***
***கீழ்த்திசை வாயிற் கணவனோடு புகுந்தேன்***
***மேற்றிசைவாயில் வறியேன் பெயர்கென"***
***(சிலப்பதிகாரம்- கட்டுரைக்காதை 177 - 183)***

கொற்றவை வழிபாடு முன்னரே பரவியிருந்த காலகட்டத்தில் கண்ணகி தன் பொற்றொடியை மதுரையில் உடைத்தாள். தாய் தெய்வ வழிபாட்டில் ஒரு மார்பு செழிப்பு (வளமை) என்பதையும் மற்றொன்று உணவு என்பதையும் குறிக்கின்றன.

***"யாமனர் காதலன் றன்னைத் தவறிழைத்து***
***கோனகர் சீறினேன் குற்றமிலேன் யானென்று***
***இடமுலை கையாற் திருகி மதுரை***
***வலமுறை மும்முறை வாரா வலமந்து***
***மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து***
***விட்டா ளெறிந்தாள் விளங்கிழைபயாள்"***
***(சிலம்பு -வஞ்சிகாண்டம் 41-46 )***

இதில் இடது முலையைத் திருகி எறிந்தது ஒரு குறியீடாக அமைந்தது. நாட்டைப் பஞ்சம் தாக்கும் என்பதும் குறியீடாக்கப்படுகிறது. கேரளத்தில் களமெழுத்து வழிபாட்டில் தாய் தெய்வத்தின் உருவமானது பல நிறப் பொடிகளால் வரையப்படுகிறது. மார்புப்

பகுதிக்கு மட்டும் சிரட்டையில் வைத்து அவிக்கப்பட்ட அரிசிப்புட்டை வைக்கின்றனர். தாய்தெய்வத்தின் மார்பகங்கள் உணவு, செழிப்பு என்பவற்றை உணர்த்துகின்றன என்பதை அறியமுடிகிறது.

கொடுங்கல்லூரில் சேர மன்னர்களின் சிவன் கோவிலில் கண்ணகியின் எலும்புகள் ஆபரணங்கள் புதைக்கப்பட்டுப் பெருங்கற் கல்லறைவழிபாட்டுமுறைபின்பற்றப்பட்டு வந்ததாகவும் அக்கல்லறையே தற்போது திறப்புக்கள் இல்லாத ரகசிய கரு அறை எனக் காணப்படுகின்ற ஒன்றும் பிற்காலத்தில் இவ்வறைக்குஅருகில்வடக்கு நோக்கிக்காளியின் சிலைநிறுவப்பட்டதாகவும்கொடுங்கல்லூர் குறும்பபகவதி (கண்ணகி) கோவிலை ஆய்வு செய்த இந்துசூடனின் கருத்து சிந்தனைக்குரியது. நாட்டுப்புற சமய வழிபாடுடைய ஒரு தெய்வத்தை வைதிக சமய மரபுக் கோவிலில் உள்வாங்கி நிறுவனச்சமயத் தெய்வமாக்கும் முயற்சியையே இது காட்டுகிறது.

> **"பால் பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து**
> **இமைய வருறையு மிமையச் செவ்வரைச்**
> **சிமையச் சென்னித் தெய்வம் பரசி"**
> ***(225-227)***

என்ற சிலப்பதிகாரப் பகுதி இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

இவ்விரு வழிபாடுகளும் இணைக்கப் பட்ட காலத்திலேயே கண்ணகி காளியின் அவதாரமாகக் குறிப்பிடும் பிற கதைகள் தோன்றியிருக்க வேண்டும். கேரளத்தில் வழங்கும் மணிமங்காள தோற்றம் பாட்டு, புகழேந்தியாரின்கோவிலன்கதைபோன்றவை இதனடிப்படையில் தோன்றியிருக்கலாம். கேரளத்தில் செங்கன்னூரில் அமைந்துள்ள செங்கனூர் பகவதி கோவில் பற்றிய தல புராணத்தில் நல்லூர் நாராயண பிள்ளை கூறும் செய்திகளும் இந்த அமைப்பை ஒத்தவையாகும்.

கொடுங்கல்லூர் கோவிலில் பாடப்படும் தெறிப்பாட்டு (ஆபாசப்பாட்டு) கண்ணகி (காளி) வழிபாட்டில் இணைந்த காலகட்டத்தை தெளிவாக வரையறுக்க இயலவில்லை என்கிறார் இந்துசூடன். காளி பாண்டிய மன்னனைப் பழி வாங்கவே அவனுக்கு மகளாகப் பிறந்தார் என்பதில் கண்ணகி பற்றிய தமிழ்க் கதைப்பாடல்கள் ஒற்றுமை கொள்கின்றன. தாருகனைப்பழி வாங்கவே காளி பிறப்பெடுத்தாள் எனக் கேரளத்து மணிமங்கா தோற்றப்பாட்டு குறிப்பிட்டாலும் இறுதியில் பழிவாங்குதல் பாண்டியனையே. காளிகோவிலில் வெட்டுண்ட காளிபக்தனான எண்ணெய் வணிகனே கோவலனாகப் பிறந்தான் எனப் பிற கதைப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. பரதன் என்னும் படைத்தலைவன் வணிகனான சங்கமனை ஒற்றன் எனப் பொய்க்குற்றம் சாட்டிக் கொன்றான். அவ்வினைப் பயனாகவே கோவலனாகப் பிறந்து வெட்டுண்டான் என்று கூறுகிறது சிலப்பதிகாரம்.

> **"கொலைக்களப்பட்ட சங்கமன் மனைவி**
> **நிலைக்களங் காணா நீலியென்போள்**
> **அரசர் முறையோ பரதர் முறையோ**
> **உரீர்முறையோசேரீயீர்முறையோவென**
> **மன்றீனு மறுகினஞ் சென்றனர் பூசலிட்டு**
> **எம்முறு துயரஞ் செய்தோ ரியாவதும்**
> **தம்முறு துயரமுற்றாகுக வென்றே**
> **விழுவோளிட்ட வழவில் சாபம்**
> **பட்டனிர்............................"**
> ***(சிலம்பு . கட்டுரைகாதை 158-170)***

இவ்வாறு சங்கமனின் மனைவி நீலி சாபமிட்டது குறிப்பிடப்படுகிறது.

கேரளத்தில் வாய் மொழியாக வழங்கும் தோற்றம் பாட்டுகளில் தாருகனைக் கொல்லச் சிவனின் நெற்றிக்கண்ணிலிருந்து பிறந்த காளி ஓர் அரசனால் வளர்க்கப்படுகின்றாள். மற்றொரு அரசனின் மனைவி சிவனின் அருள்பெற்ற கனியைப் புசித்து ஒரு பாலகனைப் பெற்றெடுத்தாள். (காளியும் பாலகனும் சகோதர உறவு

என்றாகிறது) கண்ணகி (காளி) பாலகன் திருமணம் முடிந்ததும் மனைவியுடன் நண்பனது வீட்டுக்கு விருந்துக்கு வந்து விட வேண்டும் என்ற ஒப்பந்தம் இருந்த படியால் இருவரும் விருந்துக்குச் செல்கின்றனர். சென்ற இடத்தில் பாலகன் கொலை செய்யப் படுகின்றான். தெய்வ அம்சமான கன்னியை அதுவரை பாலகன் தீண்டியதில்லை. இறந்த அவனது உடலை ஏழு நாட்கள் தடவித் தடவி உயிர்ப்பித்தாள் கன்னிகை. அவனைத் தேவனாக்கிவிட்டு அரசனைப்பழிவாங்கினாள். சிவனிடம் தான் இருக்க இடம் கேட்டாள். கொடுங்கல்லூர் சிவன் கோவிலில் அவள் தெய்வமாக இருத்தப்பட்டாள் என்கிறது தோற்றம்பாட்டு. இக்கதை கண்ணகி கதையின் திரிந்த வடிவமாகக் கருதலாம். கண்ணகி பற்றிய கதை வேறுபாடுகள் தமிழகத்திலும் கேரளத்திலும் பரவலாகக் காணப்படுகின்றன. இவற்றிலெல்லாம் பத்ர காளியம்மனின் அம்சமாகவே கண்ணகியைக் கூறுகின்றனர். இவ்வாறு கண்ணகி வழிபாடும் நாட்டுப்புறச் சமய மரபில் கலந்து உருவான காலகட்டத்தில் சிலப்பதிகாரம் இயற்றப் பட்டிருக்க வேண்டும். கேரளத் தோற்றம் பாட்டுகளிலும் காளி வழி பாட்டுடன் கண்ணகி வழிபாடு ஒன்றிணைக்கப்பட்டு வருகிறது. திருவனந்தபுரத்தில் ஆற்றுகால் அம்மன் வழிபாடு பத்தினி வழிபாடாக இருந்தாலும் அதுவும் காளி வழிபாடாக உருமாறி வருகிறது.

கேரளத்தில் இடுக்கி மாவட்டத்தில் பழங் குடிகளான மன்னான் இனத்தாரிடமிருந்து வாய்மொழி வழக்கறுகளாக வழங்கப்படும் கோவலன் சரித்திரத்தில் பாண்டியனின் தலைநகர் எரியுண்டமைத் தெளிவாக் கூறப்படவில்லை. கண்ணகி கோவலனின் சிதைக்குத் தீயூட்டிவிட்டு அரண்மனை வந்து உண்மை பேசி வாதிடுகிறாள்.

***"ஐயா பாண்டியன் அருமன***
***தீயா பறக்குதடோ பாண்டியா***
***ஐயா பாண்டியன் அருமன***
***தீயா எரியுதடா பாண்டியோ***
***அட எங்கெங்கும் பார்த்தாலும்***
***தங்க விலாசமா தோற்றுதே"***

இதோடு கதை முடிகிறது. அடுத்த பாட்டில் மழை பெய்து வளம் பெருக வேண்டுமென்று வேண்டுதல் அமைகிறது.

**"தான்னனே தான்னனே**
**தன்னும் தான்னனே தானா னனே**
**பால் கொடி ரொம்ப வேணும்-சாமி**
**பால் பான பொங்க வேணும்**
**ஊருந்தான் தழைய வேணும் -சாமி**
**உத்தமழை பெய்ய வேணும்**
**ஐயா நாடுந்தழைய வேணும்-சாமி**
**நல்ல மழை பெய்ய வேணும்-சாமி**
**நல்ல மழை பெய்ய வேணும்"**

பிற கண்ணகி கதையிலும் பெரும்பாலும் மழைபெய்து வளம் பெருக வேண்டும் எனும் முடிவே காணப்படுகிறது. இது நாட்டுப்புறச் சமய மரபின் அடிப்படையாகும். சிலம்பில் இவ்வகை வழிபாடு பரவி இருந்ததற்கான சான்றுகளைக் காண முடிகிறது.

***"அவுணன்***
***தலைமிசை நின்ற தையல் பலர் தொழும்***
***அமரி குமரி, கவுரி, சமரி***
***சூலி, நீலி, மால்வற் கிளங்கிளை***
***ஐயை செய்யவள் வெய்யவாட்டக்கைப்***
***பாய்கலைப்பாவை பைந்தொடிப்பாவை***
***ஆய்கலைப் பாவை யருங்கப் பாவை"***
***(சிலப். வேட். வரி 65-710)***

என்கிறது சிலம்பு எனவே கொற்றவை வழிபாட்டுடன் பிற்காலத்திலேயே கண்ணகி வழிபாடு இணைக்கப்பட்டுள்ளது தெளிவாகிறது.

கண்ணகி கதை மலபார் பகுதியில் மரக்கலப்பாட்டு அல்லது மரக்கலத் தோற்றம் என்று அறியப்படுகிறது. மூன்று வகையான மரக்கலப் பாட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றில் கண்ணகி

*சீர்ம்பா என்ற பெயரில் அறியப்படுகிறாள். அவள் சிவனுக்கு மகளாகப் பிறந்து துர்கா என்ற தீயசக்தியைக் கொன்றதாகவும் கதை அமைந்துள்ளது. இவ்வாறு செய்த கண்ணகியை பூலோகத்திற்கு அனுப்புவது நல்லது என நினைத்து தேவர்களும் மகிழும்படி செய்தார் படைப்புக்கடவுள். இவ்வாறு கண்ணகி மீனவக் குலதெய்வமாக அறியப்பட்டாள். இந்தக் கதைப்பாடல்களில் கண்ணகி சந்திரச் சூடனின் மகளாகவும் அறியப்பட்டாள்.*

*இரண்டாவது மரக்கலப்பாட்டுக் கதைப் பாடலில் அவள் தென் கொல்லத்தில் பிறந்து வட கொல்லத்தில் பொன்மகனை மணக்கிறாள். இன்று கொய்லாண்டி என்று இது அறியப்படுகிறது. சீர்ம்பாவின் தந்தை மூத்த அரையன் என்று அறியப்பட்டாள். அரையர் என்றால் மீனவரைக் குறிக்கும் இதனால் அரையர்கள் பயன்படுத்தும் கட்டு மரத்தைப்பற்றி பாடல் அமைந்திருப்பதால் மரக்கலப்பாட்டு என்று அறியப்படுகிறது. எல்லாக் கதைப்பாடல்களும் 14 அல்லது 15-ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்டிருக்கலாம். சிலம்புக் கள்ளன், கோவிலன் கதை, கூத்தரங்கு என்று இவை அறியப்பட்டன. கண்ணகி திருமா உண்ணி என்ற பெயரில் வழிபடப்பட்டாள். பின்னர் குறும்பா என்ற பெயரில் அறியப்பட்டாள். புலவர்களால் கண்ணகி பாண்டிய நாட்டுக்குத் திரும்பிச் சென்று பொற்கொல்லனையும், பாண்டியனையும் பழி வாங்குவதாக் படைக்கப் பட்டாள். பின்பு அவள் பொன்மகனை (கோவலனை) உயிர்த்தெழச் செய்து கொடுங்கல்லூரில் சிலையாக நிறுத்தி அவளும் சிலையாக அருகே அமர்கிறாள் இவ்வாறு கேரளத்தில் வழங்கப்படும் சிலப்பதிகார கதை வடிவங்களுள் கண்ணகி சீர்ம்பா என்ற பெயரில் அறியப்படுகிறாள். கர்ணகி அம்மன் என்று மூத்தன் தரை காலனியில் வழி படப்படுகிறாள்.*

***அப்போள் சிலம்பின்றே தொனி
கேட்கும்போள்
தன்றே திருவுள்ளம் தெளியுந்தல்லோ
தன்றே திருவுள்ளம் தெளிஞ்ஞிட்டல்லோ
தன்றே மாலா செய்த பர்த்தாவின்றே
தன்றே திருமும்பில் சென்றுட்டு--
கேரளத்தில் கும்ப மாதத்தில் கண்ணகி திருவிழா நடைபெறுகிறது.தமிழில் மாசி மாதம்.***

### *விஷாரிக்காவில் செட்டியார்களின் மந்திரப் பாடல்*

கேரளத்தில் பெண் தெய்வங்கள் பொதுவாக பகவதி என்ற பெயரில் அறியப்படுகின்றன. அவற்றில் முதன்மை இடத்தைப் பெற்றவள் பத்தினித் தெய்வம் கண்ணகி. விஷாரி காவு என்ற இடத்திலுள்ள கண்ணகி கோயில் பகவதி கோயிலாகப் போற்றப்படுகிறது. இக்கோயிலில் ஆடுகளை வெட்டி நவதானியங்களோடு கலந்து பலியிடுவது வழக்கம். இந்த பலியை நடு இரவு செலுத்துவார்கள். பலியிட்ட ஆடுகளைக் கோவிலைச் சுற்றி எடுத்துச் செல்வார்கள். இங்கு குடிகொண்டுள்ள இளைய பகவதி பலியை ஏற்றுக்கொண்டு ஆடுவாள். இக்கோயிலானது மூத்த பகவதி குடி கொண்டுள்ள கொடுங்கல்லூரிலிருந்து பிடிமன் எத்துக்கொண்டு வந்து கட்டப் பட்டுள்ளது. இதை இங்கு வாழும் செட்டியார்களின் மந்திரப் பாட்டின் மூலம் அறிய முடிகிறது.

***ஆதி முதல் காவேரிப் பூம்பட்டினத்து
ஆயிரவர் வங்கிசத்தில்
அரியகண் ணகை அம்மன் ஆகவே
பிறந்து அதிரூபமான பொழுது
தீதிலா கோவிலருடன் பாரியாளாகவும்
சிறிது காலம் சென்றபின்
திங்கள் முகமாய் வந்து தனிக்காக
மதுரையில் சிலப்பு கூறினானின்
நீறியர செனென்றான் பாண்டியன் வாசரில்
நிகரிற்ற மழுவரனாம்
நித்தின புறக்கவே பாண்டிநாடெத்தி நீ***

*நீறா யெரிந்த சோதி*
*ஆதிகாலத்திலும் மகிமையாய் நீ வந்த*
*அதிசயமும் ஆரறிவாரோ*
*ஆனைக் குளம் வளர் பகவதி அம்மையே*
*ஆனந்த மகமாயே*
*அக்ரகாலக் குலவளர் பகவதி அம்மையும்*
*ஆனைதளியில் தேவரும்*
*திக்கெல்லாம் புகழ்வரும் கொல்லத்து*
*பகவதி திசவரக்கல் பகவதி*
*தினந்துதி கொண்டாடும் புத்துரில் அம்மையும்*
*ஸ்ரீகுறும்ப பகவதி பக்கமது விளையாடும்*
*நரங்கோரி பதிலிலாளிக்கல் பகவதி*
*பரிபால கிருஷ்ணனும் கொடுங்களூர் அம்மையும்*
*பலகாலம் வாழ நமக்கு*
*அக்கினியிடம் பொருள் அரிச்சேத்திர*
*பாலனும் அடிபணிந்தருளும்*
*ஆனைக்குளங்கரை பகவதி அம்மையே*
*ஆனந்தமகமாயே*

*காரொந்த கூந்தலும் குப்பியும் தொங்கலும்*
*கமல முகவறமைழகும்*
*கழில் விழி கண்களும் முத்து மூக்குத்தியும்*
*நங்கலானாணிழுகும்*
*வஞ்சீரி செங்கையும் சுற்றிடை தன்னி*
*லொருமாந்தினர் பொட்டிலழகும்*
*சீரொத்த தொந்தியும் பாத சலங்கையும்*
*செம்பவள மேனினழகும்*
*தேவியுன் பாதமே நண்ணு மடியேனுமே*
*சிந்தித்து வந்து கரிமம்*
*நேராப்ப வாகவே இந்தருள் பொறுத்*
*தருள் நேமு அபிராமி கவுரி*
*நல்ல நாக மேவிய அனவரது*
*ஆனந்த மான பொழினி*

என மூன்று மந்திரப்பாடல்கள் உள்ளன. இந்தப் பாட்டில் கண்ணகி கண்ணகையம்மன் என்று அழைக்கப்படுகிறாள். இலங்கையில் மட்டக்களப்புப் பகுதியில் கண்ணகி கோயில்களை கண்ணகையம்மன் கோயில்கள் என்று அழைத்து வருவது இன்றளவும் வழக்கத்தில் உள்ளது. முத்தயா செட்டியார் சொன்ன இந்த மூன்று மந்திரம் பாட்டுகளும் அப்படியே பதிவு செய்துள்ளார் பி.எல்.சாமி3. இந்தப் பாடலில் எழுத்துப் பிழையும் சில மலையாளச் சொற்களும் பயின்று வந்துள்ளன. இல இடங்களில் மலையாள உச்சரிப்பு வந்துள்ள போதிலும் மந்திரத்தின் பொருள் பாடலாசிரியருக்குத் தெரிந்திருக்க வில்லை. முதல் பாடலில் கண்ணகியின் பிறந்த இடமும் குலப் பிரிவும் கட்டப்பட்டுள்ளது. பின்பு கோவலனுடன் சிலகாலம் வாழ்ந்த செய்தியும் மதுரைக்கு சிலம்பு விற்கச் சென்ற கோவலன், நீதியரசனால் தண்டிக்கப்பட்டு மழுவரசனால் கொல்லப்பட்ட செய்தியும் கூறப்பட்டுள்ளது. கண்ணகி மதுரையை எரித்த நிகழ்வும் பாடப்பட்டுள்ளது. கண்ணகி கண்ணகை அம்மனாகவும், பாண்டியன் நீதியரசனாகவும், கோவலனைக் கோடரியால் வெட்டியவன் மழுவரசனாகவும் காட்டப் படுகின்றனர். பண்டைய காலத்தில் கண்ணணியாய் வந்து பின்பு கூறும் கதையில் விஷாரி சிலம்பை எடுத்துச் செல்லுதல் என்பது திரிபு அடைந்த நிகழ்வாகும். விஷாரி என்பது பாம்பு வைத்தியன் என்றும் பாம்புப் பிடாரன் என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது. செட்டியார் கதையில் பாம்பு குறித்த எந்த செய்தியும் இடம்பெறவில்லை. எனினும் விஷாரியான பாம்புப் பிடாரனை முற்பிறப்பில் கொன்ற வாணியன் அடுத்த பிறவியில் கோவலனாகப் பிறந் பழிவாங்கப்படுகிறான். பெரிய எழுத்துக் கோவலன் கதையில் வரும் பாம்பாட்டி பாம்பைக் குடத்திலிட்டு கோவலனைச் சத்தியம் செய்யவைக்கிறான். புகழேந்திப் புலவர் எழுதிய கதையில் கோவலனின் முற்பிறப்பு பற்றிய செய்தி கூறப்படவில்லை

இடைக்காலத்தில் கண்ணகி கதையானது மலையாளப் படைப்பாளர்களால் வடமொழி கலக்கப்பட்டு கதைப்பாடல் வடிவில் எழுதப் பட்டது. வயநாட்டுப் பகுதியை ஆட்சி செய்த வையாவிக் கோன் பேகன் கண்ணகி கதையில்

ஸ்ரீ குறும்பா தேவி என்ற பெயரில் தெய்வமாக்கப்படுகிறாள். கோழிக்கோட்டிற்கு வடக்கே அமைந்துள்ள பந்தளாயினி கோயிலில் கண்ணகி காளி உருவத்தில் முதன் முதலாக வணங்கப்படுகிறாள். கேரளக் கண்ணகி கதைப் பாடலொன்று அவளது பிறப்பு தென் கொல்லம் என்று கூறுகிறது. மேற்குக் கடற்கரையை உறைவிடமாகக் கொண்டு எழுதப்பட்ட இக்கதைப்பாடலில் பாண்டிய மன்னன், மதுரை நகரம், பொற்கொல்லன் ஈட்டி நம்பி ஆகியவர் இடம் பெறுகின்றனர். பிற்காலத்தில் தமிழகத்தில் கண்ணகி தொடர்பான பல கதைகள் எழுதப் பெற்றன. அவற்றுள் புகழேந்திப் புலவர் இயற்றிய பெரிய எழுத்துக் கோவலன் கதையும், சூடாமணிப் புலவர் எழுதிய வைசிய புராணமும் குறிப்பிடத்தக்கனவாகும். கேரளத்தில் தோற்றம் பாட்டு, நல்லம்மா கதை, மரக்கலப்பாட்டு, சிலம்புக் கள்ளன், ஆவியார் பாட்டு போன்றவை எழுதப்பட்டன. கேரளத்தில் அம்மை நோயானது “மாரியம்மா” என்றும் வடமொழியில் “மகாமாரி” என்றும் அழைக்கப்பட்டது. சமண மதத்தில் அம்மை நோயை “சீதளம்” என்று அழைத்தனர். தமிழ் நாட்டிலும் மலபார் பகுதியிலும் சீர்மா (ஸ்ரீ குறும்பாகண்ணகி) மாரியம்மனின் அவதாரமாகக் கருதப்பட்டாள். மலபாரில்மாரியம்மனுக்குக்கொண்டாடப்படும் விழா களியாட்டு (காளி ஆட்டம்) என்றும், இது தொடர்பாக நடத்தப்படும் சடங்குக்கு “குளிர்மா” என்றும் இலங்கையில் “கொளுத்தி” என்றும் அழைக்கப்பட்டது. இச்செய்தியானது மலபாருக்கும் இலங்கையின் வடகிழக்கு வட மேற்குப் பகுதிக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகிறது. சீர்மா கதையில் மாதவிக்குப் பதிலாக ஏழு சப்த மாதர்களை படைத்துள்ளார் ஆசிரியர். அவர்கள் தாயம் விளையாடுவதில் வல்லவர்களாகத் திகழ்ந்து பொன்மகனாகிய கோவலனை தங்களுடனே வைத்துக் கொள்ள முயன்றனர். ஆனால் கண்ணகி அவர்களிடமிருந்து பொன்மகனை விடுவித்தாள். பொன்மகன் கண்ணகியின்சிலம்பை விற்பதற்காகமதுரை செல்கிறான். அங்கு அரசியின் சிலம்பைத் திருடியதாகப் பொற்கொல்லனால் அரசனிடம் காட்டிக்கொடுக்கப்பட்டு கொல்லப்பட்டான். இதையறிந்த கண்ணகி மதுரைக்குச் சென்று பாண்டிய மன்னனையும் பொற்கொல்லனையும் கொன்றுவிட்டு பொன்மகனை உயிர்பெறச் செய்கிறாள். கொடுங்கல்லூரில் கண்ணகி தெய்வமாக்கப்பட்ட போது அவளருகில் பொன்மகனும் துணை தெய்வமாக்கப்பட்டான். மலபார் பகுதி முழுவதும் இந்தக் கதையே வழக்கில் இருந்து வருகிறது.

வட கேரளத்தில் கள்ளிக்கோட்டைக்கு முப்பது கல் தொலைவில் கொயிலாண்டி என்ற ஊர் உள்ளது. கல்வெட்டுகளும் இலக்கியங்களும் இவ்வூரை பந்தலாயினிக் கொல்லம் என்று குறிப்பிடுகின்றன. இங்கு குடிகொண்டிருக்கும் தெய்வம் களி என்று மக்களால் அழைக்கப் பெறுகிறது. இங்கு மீன பரணி நாளில் நடக்கும் திருவிழாவில் கொடுங்கல்லூர், மாகி என்னும் இடங்களிலிருந்து வரும்செட்டியார்கள்தொடக்கப்பாடலாக, கண்ணகிமந்திரப்பாடலைப்பாடுகின்றனர். விருத்தம் என்று கூறிக் கொள்ளும் இப்பாடல்களில்மூன்றுமட்டும்செட்டியார் இனத்தவரான முத்தையா என்பவர் மூலம் பி.எல்.சாமி தருகிறார். மந்திரப் பாட்டுப் பாடும் செட்டியார்களில் ஒருவரான அலங்காரச் செட்டியார் என்பவர் இங்கு கடை வைத்திருந்ததாகவும், அவர் இக்கோயிலுக்கு நிலம்தானமாக கொடுக்கப்பட்ட செய்தியும் பந்தலாயினிக் கொல்லத்தில் அண்மையில் கிடைத்த கல்வெட்டு குறிப்பிடுகிறது. இவர்களிடத்தில் கண்ணகிக் கதை ஒன்றும் வழக்கில் இருந்து வருகிறது. இதுதான் புகழேந்திப் புலவரின் “பெரிய எழுத்துக் கோவிலன் கதை”என்றும் கூறப்படுகிறது.

விஷாரிகாவு கோயிலில் பாடப்படும் மந்திரப்பாட்டு தமிழில் அமைந்திருந்தாலும் அது மலையாள மொழியில் எழுதப்பட்டு செட்டியார்களால் பாடப்படுகிறது. இவர்கள் மலையாள மொழி மட்டுமே பேசுகின்றனர்.

ஆயின் வீட்டிலும் தங்கள் இனத்தவரிடமும் மலையாளம் கலந்த தெலுங்கு பேசுவதாக கூறுகின்றனர். இச்செட்டியார்கள் கி.பி.11-ஆம் நூற்றாண்டிலேயே பந்தலாயிணி கொல்லத்திற்கு வந்திருக்க வேண்டும் என்று கல்வெட்டுச் சான்று வழி அறிய முடிகின்றது. இப்போது அக்கோயிலில் பாட்டுப் பாடுகின்றவர்கள் தங்களை ஆயிரவைசியச் செட்டியார்கள் என்று கூறிக் கொள்கின்றனர். மேலும் இவர்களது முன்னோர்களின் பிறப்பிடம் காவேரிப்பூம்பட்டினம் என்றும் குறிப்பிடுகின்றனர். பண்டைக் காலத்தில் இவர்கள் இங்குக் குடியேறியபோதுதமிழ்ப்பெண்கள்கிடைக்காத போது மலையாளப் பெண்களை மணந்ததாகவும் நாளடைவில் தங்கள் இனத்தவர்கள் தமிழை முற்றும் மறந்து மலையாள மொழியையே தாய்மொழியாகக் கொண்டனர் என்றும் கூறுகின்றனர். ஆயின் சே. கோவிந்தன் தனது ஆய்வுக் கட்டுரையில் "விஷாரி காவை" "பிஷாரிக் காவு" என்றும், இப்பாடல் 15 அல்லது 16-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம் என்றும் "வலிய வீட்டில் முதலியார்" என்பவர் இப்பாடலைப் பொருள் புரியாமல் பாடுவதாகவும் குறிப்பிடுகின்றார்.

தற்காலத்தில் "வெளிச்சப்பாடன்மார்" என்றறியப்படக் கூடிய சாமியாடிகள் பெண்களும் பெண்களைப் போன்று ஆண்களும் சிவப்பு ஆடை உடுத்திக்கொண்டு, கையில் நீண்ட கொடுவாளைக் கையில் பிடித்து தெய்வீக ஆவேசம் பூண்டு "காவு தீண்டல்" நிகழ்வுக்குச் செல்கின்றனர். அங்கு மக்களுக்கு அருள்வாக்குச் சொல்கின்றனர்.

இந்நிகழ்வானது சிலப்பதிகார வரந்தரு காதையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பாசண்ட சாத்தன் பார்ப்பனப் பெண்ணான தேவந்தியின் மேல் தெய்வமுற்று அருள்வாக்கு உரைக்கின்றான். மாடல மறையோனிடம் புனித நீரைக் கொடுத்து, அங்கு வந்திருக்கின்ற மூன்று சிறுமிகளின் மீது தெளிக்குமாறுக் கூறுகின்றான். அப்புனித நீரானது பழம்பிறப்பை உணர்த்தும் சக்தியுடையது. வாழ்த்துக்காதையில் குறிப்பிடப்படும் ஆயத்தாரும் இங்கு சாமியாடும் வெளிச்ச பாடன்மாரும் ஒரே நிகழ்ச்சியில் கலந்து கொள்வது பொருத்தமுடையதாகத் தெரிகின்றது (பாசண்டச் சாத்தன் தேவந்தியின் மீது தெய்வமுற்றதும் கண்ணகி வெளிச்சப்பாடன்மார் மீது தெய்வமுற்று அருள்வாக்கு சொல்லுதல்) குளிர்மா என்று சொல்லும் "குளுத்தி" என்பதும் கண்ணகியின் நல்வாக்கை அறிவிப்பதாக உள்ளது.

## முடிவுரை

மதுரையில் தனது கணவனை இழந்த பின்னர் கற்புக்கரசி கண்ணகி சினம் தனிந்து சேர நாட்டிற்குப் பயணம் செய்து தேனி, கம்பம், குமுளி வழியாகவோ நாஞ்சில் நாட்டு வழியாகவோ தனது துயர பயணத்தைத் தொடர்ந்து ஆங்காங்கு ஆதரவளித்த அன்பர்களிடம் தனது சோகக் கதையை விவரித்துத் தெய்வ லோகம் செல்கிறாள். கேரளத்திலுள்ள ஆற்றுகால், கொடுங்கல்லூர் பகவதி அம்மன் கோவில், மங்களா தேவி கோட்டம், பெருமலை போன்ற பழங் குடிகளிடையே காணப்படும் கண்ணகி கோவில்கள் ஆகியவற்றில் இன்றும் கண்ணகியின் புகழையும் கீர்த்தியையும் மக்கள் உற்சாகத்துடன் பறைசாற்றி வழிபட்டு வருகின்றனர். கண்ணகி வழிபாடு காளி வழிபாடாக காலப்போக்கில் மாறியுள்ளது. கேரளத் தமிழக நாட்டுப்புறச் சமய மரபிலும் கண்ணகி வழிபாடுகள் உள்வாங்கப் பட்டிருக்கிறது. கேரளத்தில் தோற்றம் பாட்டுகளில் குறிப்பிடுவது போலக் காளி வழிபாட்டுடன் கண்ணகி வழிபாடு ஒன்றிணைக்கப் பட்டுள்ளது.

## துணை நூல் பட்டியல்

### மூல நூல்கள்

1. சிலப்பதிகாரம்.
2. தொல்காப்பியம்.
3. திருச்சம்பரத்தந்தாதி - செல்லன் கோவிந்தன் பதிப்பு, சித்தூர்.

**நூல்கள் கட்டுரைகள்**

1. நாச்சிமுத்து. கி. சிலப்பதிகாரம் சேர நாட்டுக் காப்பியம், அச்சிடப்படாத கட்டுரை.
2. புகழேந்தியார், கோவிலன் கதை, மதுரை.
3. நசீம்தீன், சிலப்பதிகாரமும் பிற கண்ணகி கதைகளும் வழிபாடுகளும்.
4. உள்ளூர் எஸ் பரமேஸ்வர ஐயர், மணிமங்கா தோற்றம் பாட்டு (kerala Sahihya Charitram Trivandrum Vol1. 1957 (English)
5. குமரேசன். க, சிலம்பில் கதை வேறுபாடுகள், அச்சிடப்படாத முனைவர் பட்ட ஆய்வேடு, கேரளப் பல்கலைக்கழகம் 1975.